ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.கி.கணேசன்

ந.க.எண்.28/2024

நாள். 08.02.2024

பொருள் : மனைபிரிவு அங்கீகாரம் – தூத்துக்குடி மாவட்டம் – ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி – காயல்பட்டிணம் தென்பாகம் கிராமம் சர்வே எண். 217/பி, 218/5ஏ, 218/5பி, 218/6 மற்றும் 218/7ல் 1.88 ஏக்கர் பரப்பளவு காலியிடத்தினை – வீட்டுமனை குடியிருப்பு பகுதிகளாக (பிளாட்) பிரித்து மனைபிரிவு அமைத்துள்ளது – தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது – மனைபிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை :

1. மனுதாரர் திரமதி. ரா. கிருஷ்ணகுமாரி என்பவரது விண்ணப்பம் நாள். 08.01.2024
2. சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களது தொழில்நுட்ப அங்கீகார எண் 2426/2023/எல்ஏ1 நாள் 02.01.2014
3. ஆறுமுகநேரி பேரூராட்சி மன்ற தீர்மான எண். 10 நாள். 12.01.2024
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
5. அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.06.2004
6. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017
7. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க.எண்தி3/8603/2021 நாள்.03.09.2021
8. அரசாணை எண் 18 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ,நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண் 16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ,நாள்.30.01.2020
9. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (ந.வ.4(1) நாள். 23.09.2020
10. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (ந.வ.4(1) நாள். 09.12.2020
11. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 30.08.2017
12. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017 எல் ஏ1,நாள் 08.09.2017
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019 பி ஏ2 நாள் 14.10.2019

13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019 பி ஏ2 நாள் 05.02.2020

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் காயல்பட்டிணம் தென்பாகம் கிராமம் சாவே எண். 217/பி, 218/5ஏ, 218/5பி, 218/6 மற்றும் 218/7ல் 1.88 ஏக்கர் பரப்பளவு உள்ள காலியிடத்தினை குடியிருப்பு மனைபிரிவுகளாக 35 எண்ணம் பிளாட் அமைத்து அதற்கு பார்வை 2ன் படி வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டும், பத்திர பதிவுகளில் உள்ள விபரங்களின் படி சாலைகள், பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்து பிற்காலங்களின் பேரூராட்சி பராமரிப்புக்கு ஏதுவாக பேரூராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3 காணும் ஆறுமுகநேரி பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் படி மனைபிரிவு அங்கீகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மனைப்பிரிவு அங்கீகாரம் செய்வதற்கான நெறிமுறைகள் நில உரிமைதாரரால் செய்யப்பட்டுள்ளதால் கீழ்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி புல எண்ணில் போடப்பட்டுள்ள 35 குடியிருப்பு மனைப்பிரிவுக்கு மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அங்கீகாரம் தொழில்நுட்ப அனுமதி மற்றும் மனைபிரிவு அங்கீகாரம் வழங்கிய எண் குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.
2. அங்கீகாரம் வழங்கிய பின்பு அல்லது தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனைபிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தூத்துக்குடி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.
3. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட (பத்திர பதிவு மூலம்) இடங்களை உட்பிரிவியர் அலுவலகத்தில் நில உரிமைதாரர் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது இதற்கான செலவு கட்டணத்தை பேரூராட்சிக்கு செலுத்த பேரூராட்சி மூலம் உட்பிரிவு செய்து கொள்ள இசைவு தெரிவித்து நில உரிமைதாரர் பத்திரத்தில் எழுதி கையெழுத்திட்டு தர வேண்டும்.
4. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும் போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து பேரூராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்று கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.
5. நன்கொடை பத்திரம் மூலம் பேரூராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ, நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது


சொந்தமாக எடுத்து கொள்ளவோ கூடாது. இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

செயல் அலுவலர்
சிறப்புநிலை பேரூராட்சி
ஆறுமுகநேரி

பெறுநர்
திருமதி. ரா. கிருஷ்ணகுமாரி
88/5, 2 வது குறுக்கு தெரு,
கஸ்டம்ஸ் காலனி, பெசன்ட் நகர்
சென்னை

நகல்

நகர் ஊரமைப்பு துறை ஆணையர் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.



traders : 90801-21181
icy : 93843-55351
ear : 97900-52254
F | TRUNKS | KIDSWEAR
ook.com/Dinamalardaily

153 ■ VOL 73 ISSUE 153



திர்க்கட்சிகள்
விமர்சனம்

"வேலை
ாய்ப்பு, விலை
ாசி உயர்வு,
ணிப்பூர் நில
ரம் போன்ற
ந்த பிரச்னை
ித்தும் பிரதமர்
சவில்லை.
ட்டாட்சி தத்து
த்தை தகர்த்த
ர், அதை காப்ப
க சொல்கிறார்,"
ா, தினமுல்
ங்கிரஸ் டெரக்
ரையன் குறிப்
டார்.
இடஒதுக்கீடு
ித்து மோடி
ப்பட்டமான